# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | | | |
|---|---|---|---|
| Case No: | | **S.C.No. 79/2023** | |
| Prosecution Witness : | | **PW-9/LW -12** | |
| Name : | திரு.இளம்பரிதி | Taluk | : உடையார்பாளையம் |
| S/o. | திரு.சத்தியமூர்த்தி | Age | : 37 |
| Work | தனியார்பணி | Village | மதனத்தூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **22.06.2026 by Tmt. P. Elakkiya., Assistant.**

(எதிரி முன்னிலையானார்.)

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது மேலேக்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 1 ½ வருடங்களுக்கு முன்பு நான் எனது சொந்த வேலையாக த.பழூர் காவல் நிலையம் சென்று இருந்தேன். அப்போது என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்துக்கள் முறையே அ.சா.ஆ. 3 மற்றும் அ.சா.ஆ-4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியானவர் முன்பு புலன் விசாரணை அதிகாரியிடம் அளித்த வாக்குமூலத்திற்கு மாறாக சாட்சியமளித்துள்ளதால் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், நான் அந்த விசாரணையில், கடந்த 03.05.2021ம் தேதியன்று நானும், குலோத்துங்கன் என்பவரும் மதனத்தூர் கொள்ளிடக்கரை அருகே நின்றுக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது அங்கு இருந்த டி.பழூர் காவல் நிலைய ஆய்வாளர் காவல் நிலைய குற்ற எண்.130/2021 சட்டப்பிரிவு 294(b), 323, 307, 506(ii) of IPC என்ற வழக்கில் எதிரி சங்கரை எங்கள் முன்னிலையில் கைது செய்தார் என்றும், அப்போது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வீட்டின் பின்புறம் தான் மறைத்து வைத்திருந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய அரிவாளை எங்கள் முன்னிலையில் எடுத்து ஒப்படைத்தார் என்றும், அதனை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார் என்றும், மேற்படி அந்த எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகஜரிலும் சாட்சியாக நானும், என்னுடன் இருந்த குலோத்துங்கன் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**இல்லை.**

ஒப்பம்.திருமதி.மணிமேகலை,L.L.M.,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,

அரியலூர்.